DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 57 of 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW-2 (L.W. 2)** |
| **Name** | **:** | செல்வன் |
| **Father's Name** | **:** | கரியபெட்டன் |
| **Age** | **:** | **57** |
| **Address** | **:** | குன்னூர் |
| **Village** | **:** | குன்னூர் |
| **Calling** | **:** | சிறப்பு உதவி ஆய்வாளர் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**15.07.2026**

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது குன்னூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகின்றேன். கடந்த 05.12.2023 அன்று நான் மஞ்சூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல்உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நானும், உதவி ஆய்வாளர் ஸ்ரீனிவாசன் மற்றும் காவலர் அபுபக்கர் சித்திக் ஆகியோருடன் ரோந்து சென்றபோது ஓனிகண்டி என்ற இடத்தில் எதிரி அவரது மளிகைகடைக்குள் காலை சுமார் 9.00 மணிக்கு ஒரு வெள்ளை பாலிதின் பையில் ஆன்ஸ், கூல்லிப், V1 Tobacco போன்ற

பொருட்கள் அடங்கிய பாக்கட்கள் மொத்தம் 59 வைத்திருந்தார் என்பது தெரியவந்தது. உதவி ஆய்வாளர் எதிரியை கைது செய்து அந்த பாக்கட்டுகளில் இருந்து ரசயாண பரிசோதனைக்காக ஒவ்வொன்றிலும் ஒரு பாக்கட்டை மகசரில் கைப்பற்றி நானும், அபுபக்கர் சித்திக்கும் அதில் சாட்சிகளாக கையொப்பம் போட்டோம். பிறகு எதிரி மற்றும் கைப்பற்றிய தடயங்களுடன் காலை 10.30 மணிகு நிலையம் திரும்பி மஞ்சூர் காவல் நிலைய குற்ற எண் 125/2023ல் பிரிவு 20(2) COTPA Act மற்றும் பிரிவு 328 இ.த.ச கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். என்னை ஆய்வாளர் இது சம்பந்தமாக விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u> :

ரோந்து காவல் பணிக்கு எங்களை அமர்த்தியது காவல் ஆய்வாளர் என்பது சரி. ரோந்து பணிக்கு செல்லும் விவரத்தை நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்வோம் என்பது சரி. நான் இந்த விவரங்களை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொன்னேன் என்பது சரி. நாங்கள் எதிரி கடைக்கு சென்றதாக கூறும்போது அங்கு பொது மக்கள் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. கடையில் சோதனை செய்ததாக கூறுவதை பொறுத்து ஆய்வாளரிடம் முன் அனுமதி வழங்கப்பட்ட கடிதம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரியை கடையில் சோதனை செய்ததாக கூறுவதை பொறுத்து தனிநபர் சாட்சிகளிடம் சோதனை ஜாபிதா தயார் செய்து கையொப்பம் பெறப்பட்டதா என்பது எனக்கு

தெரியவில்லை. அந்த கடையின் உரிமையாளர் எதிரிதான். அந்த கடைக்கு எதிரி குமார் உரிமையாளர் என்பதை தெரிவிக்கும் ஆவணங்கள் பார்த்தீர்களா என்றால் உதவி ஆய்வாளர் இது பற்றி எதிரியை விசாரித்ததை மட்டும் நான் பார்த்தேன். எதிரி கடையில் தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாக கூறும் பாலிதின் பையை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றினார். எதிரி கடையில் மேற்கொண்டதாக கூறும் சோதனை பற்றி வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் வீடியோ எடுக்கப்பட்டது. யார் மொபைல் போனில் அந்த வீடியோ எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் அவ்வாறு சம்பவம் நடைபெறவோ, வீடியோ எடுக்கவோ இல்லை என்றும், அதனால்தான் நான் ஞாபகம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் தவறு. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சம்பவ இடத்தில் வீடியோ எடுக்கப்பட்ட விவரத்தை சொன்னேன். ஒரு வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும்போதுதான் குற்ற எண் தெரியவரும் என்பது சரி. பொதுவாக ஒரு இடத்தில் பொருள்களை கைப்பற்றும்போது அந்த இடத்திலேயே அதற்கான மகசர் தயார் செய்வோம் என்பது சரி. இந்த வழக்கிலும் அது போன்றுதான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம் என்பது சரி. அதன்பிறகுதான் காவல் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்து இதர ஆவணங்கள் தயார் செய்தோம் என்பது சரி. உண்மையில் நான் கூறுவது போல் ரோந்து செல்லவோ எதிரியின் கடையில் தடயங்களை கைப்பற்றவோ அங்கு சோதனையை வீடியோ எடுக்கவோ இல்லை என்றும், அதனால்தான் சோதனை சம்பந்தமான உரிய விதிமுறைகளை கடைபிடிக்கவோ, அங்கு எடுக்கப்பட்டதாக கூறும் வீடியோவை தாக்கல்செய்யவோ இல்லை என்றும், ஆவணங்களை நிலையத்திலேயே தயார் செய்து எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் தவறு. சம்பவ இடத்தை பொறுத்து வரைபடங்கள் தயார் செய்தார்கள்.

**மறு விசாரணை** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.07.15 16:06:14 +0530